<u>நீதித்துறை நடுவர் எண் 2 நீதிமன்றம், திருப்பத்தூர், வேலூர் மாவட்டம்.</u>

<u>எஸ்.டி.சி 923/2021</u>

2023 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 ம் நாள் திங்கட்கிழமை அரசு தரப்பு சாட்சியாகிய அ.சா. 1 வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 வது விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி திரு.எஸ்.பூபதி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ரகுபதி | வயது | 62 |
| த . பெ . (அ)க . பெ . | சின்னையன் | தொழில் | விவசாயம் |
| ஊர்/பணிபுரியுமிடம் | குருபவானிகுண்டா | சமயம் | இந்து |
| வட்டம் | நாட்றம்பள்ளி | சாதி | |
| மாவட்டம் | திருப்பத்தூர் | | |

<u>முதல் விசாரணை :</u> எதிரி மனுவின் பேரில் ஆஜரில்லை.

(1) நான் குருபவானிகுண்டா கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். வழக்கில் காயமடைந்த மஞ்சுளா, மேகலா, சின்ன அண்ணன், சேஷாந்த், பெருமாள் மற்றும் புஷ்பா ஆகியோர்களை தெரியும். சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்பு தேதி, மாதம் நினைவில்லை. மேகலா என்பவரின் கணவர் இறந்துவிட்டார், இதுதொடர்பாக முன்னால் சட்ட உறுப்பினர் திரு ராஜா என்பவர் முன்னிலையில் பஞ்சாயத்து பேசுவதற்காக அன்றைய தினம் பகல் 11.00 மணியளவில் எனக்கு சொந்தமான டிஎன் 10 எஎல் 5344 என்ற பதிவெண் கொண்ட எனது ஆம்னி வேனில் மேலே குறிப்பிட்ட நபர்களை அமர்த்திக்கொண்டு எனது வாகனத்தை திருப்பத்தூர் டு சேலம் சாலையில் ஓட்டிச்சென்றேன். அப்போது எனது வண்டி விஜய் வித்யாலாயா பள்ளி அருகே சாலையின் இடதுபுறம் நான் சென்ற போது எனக்கு பின்னால் வந்த மணிமேகலை என்ற தனியார் பேருந்து எனது வாகனத்தின் மீது மோதி விபத்தினை ஏற்படுத்தியது.

(2) மேற்படி விபத்தினால் நான் ஓட்டி வந்த வேன் சாலையில் கவிழ்ந்து விபத்து ஏற்பட்டது. விபத்து ஏற்படுத்திய பேருந்தில் பயணித்த நபர்கள் மற்றும் ஓட்டுநர் பேருந்திலிருந்து இறங்கிஓடிவிட்டார்கள். மேற்படி விபத்து காரணமாக எனது வலது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டது. மற்ற நபர்களுக்கு லேசான காயம் ஏற்பட்டிருந்தது. பின்பு காயம்பட்ட எங்கள் அனைவரையும் 108 ஆம்புலன்ஸ் மூலம் திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்தோம். பின்பு வழக்கு தொடர்பாக போலீஸார் என்னிடம் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் தான் போலீஸாரிடம்

நான் கொடுத்தது ஆகும், அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். **அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. போலீஸார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை=</u>

ஊத்தங்கரை டு சேலம் மெயின்ரோட்டில் தேசிய நெடுஞ்சாலை பணி செய்வதற்காக சாலைகளை சரிசெய்தார்களா என்றால் இல்லை. நான் வாகனம் ஓட்டி சென்று திடிரென்று எந்த சிக்னலும் காட்டாமல் பிரேக் போட்டதால்தான் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது என்றால் இல்லை. நாங்கள் மருத்துவமனையிலிருந்த போது போலீஸார் என்னை விசாரணை செய்தார்கள். என்னிடம் சம்பவம் குறித்து கேட்டு கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான். கையெழுத்து போட்ட தாளில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். தவறு என்னுடையது என்றாலும் நஷ்ட ஈடு பெறுவதற்காக வேண்டி இந்த வழக்கை பேருந்தின் மீது நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை.

மறுவிசாரணை= இல்லை